## பாடம் - 5

## லாயிலாஹ இல்லல்லாவின் பொருள்

## الدرس الخامس

## معنى لا إله إلا الله

லாஇலாஹ இல்லல்லாஹ் என்பது இம்மார்க்கத்தின் அடிப்படையாகும். இஸ்லாமிய மார்க்கத்தில் இதற்கு மிகப் பெரும் அந்தஸ்து இருக்கிறது. லாஇலாஹ இல்லல்லாஹ் என்பது இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளில் முதற்கடமையும் ஈமானின் கிளைகளில் மிக உயர்ந்ததுமாகும். செயல்கள் ஏற்கப்படுவது என்பது இக்கலிமாவை மொழிந்து அதன் எதிர்பார்ப்புக்கேற்ப செயல்படுவதில் தான் இருக்கிறது.

இதன் உண்மையான பொருள்- இதைவிடுத்து வேறு பொருள் கொள்ளக்கூடாத பொருள், 'உண்மையில் வணங்கப்படுவதற்கு உரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை' என்பதாகும். 'படைப்பவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை' அல்லது 'உருவாக்குவதற்கு சக்தியுள்ளவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை' அல்லது 'உலகத்தில் இருப்பது அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை' என்று இதன் பொருளைச் சுருக்கிவிடுவது தவறாகும். ஏனெனில் இதன் கருத்து தவ்ஹீதுர் ருபூபிய்யாவுடன் மட்டும் சுருங்கிவிடுகிறது.இந்தக் கலிமாவின் அடிப்படைக் கருத்தாக உள்ள தவ்ஹீதுல் உலூஹிய்யாவை எடுத்துக் கொள்வதில்லை.

### இக்கலிமாவுக்குரிய இரு அம்சங்கள்

இக்கலிமாவுக்கு இரு அம்சங்கள் உள்ளன. ஒன்று எதிர்மறை. மற்றொன்று உடன்பாடு.

1. எதிர்மறை: இது, லாஇலாஹ - வணக்கத்திற்குரியவன் யாருமில்லை என்று நாம் சொல்லும்போது வணக்கத்திற்குரியவன் எனும் தகுதி எவருக்கும் இல்லை என்று மறுப்பதாகும்.
2. உடன்பாடு: இது, இல்லல்லாஹ்- அல்லாஹ்வைத் தவிர- என்று நாம் கூறும்போது வணக்கத்திற்குரியவன் எனும் தகுதி அல்லாஹ்வுக்கு மட்டுமே உள்ளது. இதில் அவனுக்கு இணையாரும் கிடையாது என்று ஒப்புக்கொள்வதாகும். எனவே அல்லாஹ்வைத் தவிர வேறுயாரும் வணங்கப்படக்கூடாது. வணக்க வகைகளில் எதுவும் அல்லாஹ் அல்லாதவருக்கு செலுத்தப்படக் கூடாது.

இக்கலிமாவின் பொருள் அறிந்து, இணைவைப்பதை நிராகரித்தல், ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்ளுதல் என்ற இதன் எதிர்பார்ப்பை உறுதியாக நம்பி அதன் பிரகாரம் செயல்பட்ட வண்ணம் யார் இக்கலிமாவைச் சொல்கிறாரோ அவரே உண்மையான முஸ்லிம். இக்கலிமாவை நம்பாமல் இதன்படி செயல்படுபவன் நயவஞ்சகன். இக்கலிமாவுக்கு எதிராக இணை கற்பித்து செயல்படுபவன் காபிர் இறைமறுப்பாளனும், முஷ்ரிக் - இணைவைப்பவனும் ஆவான். இக்கலிமாவை அவன் நாவால் மொழிந்தாலும் சரியே.

### லாஇலாஹ இல்லல்லாஹ்வின் சிறப்பு

இக்கலிமாவுக்கு அநேக சிறப்புகளும் பலன்களும் உள்ளன. அவற்றில் சில:

1.ஏகத்துவவாதிகளில் யார் யார் (பெரும்பாவங்கள் செய்து) நரகத்தின் தண்டனைக்கு ஆளானார்களோ அவர்கள் நரகத்தில் நிரந்தரமாகக் கிடப்பதிலிருந்து தடுப்பதற்குரிய காரணமாக இக்கலிமா திகழ்கிறது.

الحديث أنَّ رسول الله - ﷺ - قال: (( يخرج من النار من قال: لا إله إلا الله، وفي قلبه وزنُ شعيرةٍ من خيرٍ ، ويخرج من النار من قال: لا إله إلا الله ، وفي قلبه وزن بُرَّةٍ من خير، ويخرج من النار من قال: لا إله إلا الله، وفي قلبه وزن ذَرة من خير )) ﴿ متفق عليه: ٤٤ ، ١٩٣ ﴾

உள்ளத்தில் ஒரு வார்க்கோதுமை அளவு நன்மை யிருக்கும் நிலையில் லாஇலாஹ இல்லல்லாஹ் எனக் கூறியவன் நரகிலிருந்து வெளியேற்றப் படுவான். உள்ளத்தில் ஒரு கோதுமை அளவு நன்மையிருக்கும் நிலையில் லாஇலாஹ இல்லல்லாஹ் எனக்கூறியவனும் நரகத்திலிருந்து வெளியேற்றப்படுவான். உள்ளத்தில் ஒரு அணு அளவு நன்மையிருக்கும் நிலையில் லாஇலாஹ இல்லல்லாஹ் எனக் கூறியவனும் நரகத்திலிருந்து வெளியேற்றப்படுவான். நபிமொழி (புகாரி-44, முஸ்லிம்-193)

2.மனிதர்களும் ஜின்களும் இதற்காகவே படைக்கப் பட்டுள்ளனர். அல்லாஹ் கூறுகிறான்:

﴿ وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ ﴾ ﴿الذاريات: ٥٦﴾

ஜின்னையும் மனிதனையும் நான் படைத்தது- என்னை வணங்குவதற்காகவே தவிர வேறில்லை. (51:56)

3.தூதர்கள் அனுப்பப்பட்டதும் வேதங்கள் இறக்கப் பட்டதும் இதற்காகத்தான். அல்லாஹ் கூறுகிறான்:

﴿ وَمَا أَرْسَلْنَا مِنْ قَبْلِكَ مِنْ رَسُولٍ إِلَّا نُوحِي إِلَيْهِ أَنَّهُ لَا إِلَهَ إِلَّا أَنَا فَاعْبُدُونِ ﴾ ﴿الأنبياء:٢٥﴾

(நபியே!) உமக்கு முன் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும் வணக்கத்திற்குரியவன் என்னைத் தவிர வேறு யாருமில்லை; எனவே என்னையே வணங்குங்கள் என நாம் வஹி அறிவிக்காமல் இல்லை. (21:25)

4.இதுவே இறைத்தூதர்கள் மேற்கொண்ட அழைப்புப் பணியின் திறவுகோலாகும். முதன் முதலில் அவர்கள் இதன் பக்கம்தான் மக்களை அழைத்தார்கள். ஒவ்வொரு இறைத்தூதரும் தமது சமுதாயத்துக்குச் சொன்னது இதுதான்:

﴿ ... يَا قَوْمِ اعْبُدُوا اللَّهَ مَا لَكُمْ مِنْ إِلَهٍ غَيْرُهُ ﴾ ﴿الأعراف:٥٩﴾

என் சமுதாயமே! அல்லாஹ்வை வணங்குங்கள் அவனையன்றி வேறு இறைவன் உங்களுக்குக் கிடையாது (7:73)